**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.**

முன்னிலை : - **திரு.என். அழகேசன், B.Sc., L.L.M.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24- ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

TNTV06-000175-2025

**அசல் வழக்கு எண்.131/2025**

1. சுமதி
2. உமாவதி
3. வீரமணி
4. ராஜசேகர்
5. ராஜாத்தி
6. ராஜா

… வாதிகள்

**// எதிர் //**

1. வட்டாட்சியர், மன்னார்குடி.
2. மாவட்ட ஆட்சியர், திருவாரூர்.

… பிரதிவாதிகள்

இவ்வழக்கு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜயன், B.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் திரு.V.சச்சிதானந்தம், M.A., B.L., அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

**/தீர்ப்புரை/**

இவ்வழக்கில் 1ம் வாதியின் கணவரும் 2 முதல் 6 வாதிகளின் தகப்பனாருமாகிய தேவதாஸ் அவர்கள் சட்டப்படி இறந்தார் என விளம்புகை பரிகாரம் வழங்கியும், கடந்த 02.03.2006 ம் தேதியில் காணாமல் போன 1ம் வாதியின் கணவரும் 2 முதல் 6 வாதிகளின் தகப்பனாருமாகிய தேவதாஸ் அவர்களுக்கு இறப்பு சான்றிதழ் வழங்கிட 1ம் பிரதிவாதிக்கு

எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும், தாவா செலவுத்தொகை மற்றும் இதர பரிகாரங்கள் வழங்கக் கோரியும் வாதியால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **திருத்தப்பட்ட வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்** :-

**2.1.** 1ம் வாதியின் கணவரும் 2 முதல் 6 வாதிகளின் தகப்பனாருமாகிய தேவதாஸ் அவர்கள் சட்டப்படி இறந்தார் என்று விளம்புகை செய்யக் கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தேவதாஸ் அவர்களுக்கு பத்மாவதி மற்றும் 1ம் வாதி சுமதி ஆகிய இரண்டு நபர்கள் மனைவிகள் ஆவார்கள். பத்மாவதி அவர்கள் கடந்த 11.03.1994 ம் தேதியில் இறந்துவிட்டார். மேற்படி தேவதாஸ் பத்மாவதி தம்பதியருக்கு 2 முதல் 4 வாதிகளும் தேவதாஸ் சுமதி தம்பதியருக்கு 5 மற்றும் 6 வாதிகளும் வாரிசுதாரர்கள் என்றும் வாதிகளை தவிர தேவதாஸ் அவர்களுக்கு வேறு வாரிசுதாரர்கள் இல்லை.

**2.2.** 1ம் வாதியின் கணவரும் 2 முதல் 6 வாதிகளின் தகப்பனாருமாகிய தேவதாஸ் கடந்த 02.03.2006 ம் தேதியில் அவரது வீட்டிற்கு பொருட்கள் வாங்குவதற்காக முக்குளம் சாத்தனூர் கிராமத்திற்கு அருகிலுள்ள வடசேரி என்ற ஊருக்கு சைக்கிளில் சென்றுள்ளார். அதன் பிறகு அவரது வீட்டிற்கு திரும்ப வரவில்லை. வாதிகள் தேவதாஸ் அவர்களை வடசேரி என்ற ஊரில் பலமுறை தேடி பார்த்தும் அவர் கிடைக்கவில்லை. மேற்படி வாதிகள் விசாரித்த வகையில் தேவதாஸ் அவர்கள் அவரது சைக்கிளை சைக்கிள் பாதுகாக்கும் இடத்தில் வைத்துவிட்டு ரசீது பெற்றுக் கொண்டு சென்றுவிட்டார்.

**2.3.** 02.03.2006 முதல் தேவதாஸ் காணவில்லை. 1ம் வாதி தேவதாஸ் அவர்கள் காணாமல் போனது தொடர்பாக பாப்பநாடு காவல் நிலையத்தில் கடந்த 07.03.2006ம் தேதியில் புகார் கொடுக்கப்பட்டு அதற்காக மனு ரசீதும் வாதிக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் பிறகு 1ம் வாதி வடுவூர் காவல் நிலையத்திலும் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளார். 1ம் வாதி கடந்த 23.12.2016ம் தேதியில் 1ம் வாதியின் கணவர் தேவதாஸ் காணாமல் போனது குறித்து தினசரி தினமலர் தமிழ் நாளிதழில் விளம்பரம் அளிக்கப்பட்டும் எவ்வித தகவலும் 1ம் வாதிக்கு கிடைக்கப்பெறவில்லை.

**2.4.** மேற்படி தேவதாஸ் காணாமல் போய் 19 வருடங்களுக்கும் மேலாகிவிட்டதால் வாதிகள் 1ம் பிரதிவாதியை அணுகி தேவதாஸ் அவர்களின் இறப்பு சான்று கோரியபோது நீதிமன்ற உத்தரவு பெற்று வந்தால் மட்டுமே இறப்பு சான்று வழங்க முடியும் என்று அறிவுறுத்தியதன்பேரில் வாதி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். எனவே 1ம் வாதியின் கணவரும் 2 முதல் 6 வாதிகளின் தகப்பனாருமாகிய தேவதாஸ் அவர்களை கண்டுபிடிக்க இயலவில்லை என்றும், காணாமல் போய் சுமார் 19 வருடங்களுக்கு மேலாகியும் தேவதாஸ் அவர்கள் திரும்ப வராததால் தேவதாஸ் அவர்கள் சட்டப்படி இறந்தார் என்று விளம்புகை செய்தும், 1ம் வாதியின் கணவரும் 2 முதல் 6 வாதிகளின் தகப்பனாருமாகிய தேவதாஸ் அவர்களுக்கு இறப்பு சான்றிதழ் வழங்கிட 1ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கக் கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) <u>1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையின் சுருக்கம்:-</u>**

**<u>(2 ம் பிரதிவாதி அதனை தனதாகவும் ஏற்றுக்கொள்கிறார்)</u>**

**3.1.** வாதிகளால் கொடுக்கப்பட்ட வழக்கு சட்டப்படிக்கும், உண்மை நிலவரப்படிக்கும் நிலைநிற்கக்கூடியதல்ல. வாதிகளின் வழக்குரையில் பிரதிவாதியால் குறிப்பிட்டு ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதிகளை தவிர ஏனைய சங்கதிகளை பிரதிவாதி வன்மையாக மறுக்கிறார்.

**3.2.** வாதிகள் வழக்குரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின் உண்மை தன்மைகளை வாதிகளே நிரூபிக்க வேண்டியது அதனை பிரதிவாதி வன்மையாக மறுக்கிறார். மேற்படி வாதிகள் அவரது வழக்குரையில் 1ம் வாதியின் கணவரும் 2 முதல் 6 வாதிகளின் தகப்பனாருமாகிய தேவதாஸ் என்பவர் கடந்த 02.03.2006 ம் தேதியில் வீட்டிற்கு பொருட்கள் வாங்குவதற்காக வடசேரி என்ற ஊருக்கு சென்றபோது அங்கிருந்து காணாமல் போய்விட்டார் என்று குறிப்பிட்டுள்ள சங்கதிகளை வாதிகளே நிரூபணம் செய்ய கடமைப்பட்டுள்ளார்கள்.

**3.3.** வாதிகள் தேவதாஸ் என்பவரை தேடி கிடைக்காததால் பாப்பாநாடு காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும் வடுவூர் காவல் நிலையத்தில் புகார் அளித்ததாகவும் குறிப்பிட்டுள்ள சங்கதிகளையும் தினசரி தமிழ் நாளிதழில் விளம்பரம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தையும் வாதிகளே நிரூபிக்க வேண்டியுள்ளது.

**3.4.** வாதி அவரது வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் மற்றும் வழக்கு மூலம் தவறானவை. வாதி அவரது தரப்பினை நிரூபணம் செய்ய எவ்விதமான உரிய ஆவணங்கள்

தாக்கல் செய்யாத நிலையில் வாதி கோரியுள்ள யாதொரு பரிகாரமும் வாதிக்கு கிடைக்க கூடியதல்ல.

**3.5.** பிரதிவாதி அரசு அலுவலர் என்பதால் பிரதிவாதிக்கு எதிராக கொடுக்க வேண்டிய அறிவிப்பினை கொடுக்காமல் வாதிகள் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கினை பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார்கள்.

**4)** இவ்வழக்கில் தீர்வு காணும் பொருட்டு, வழக்குரை, எதிர்வழக்குரை ஆகியவற்றை நன்கு பரிசீலித்து கீழ்கண்ட வழக்கெழுவினாக்கள் வனையப்பட்டன.

**வழக்கெழுவினாக்கள் ;-**

01. Whether a person devadoss missing more than 7 years?
02. Whether the plaintiff entitle the relief of declaration of civil death as prayed for?
03. To what other relief?

**5)** திருத்தப்பட்ட வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை நீதிமன்றம் பரிசீலனை செய்கையில், கூடுதல் எழுவினா வனைவது அவசியம் என தீர்மானித்து கீழ்கண்ட கூடுதல் எழுவினா வனையப்பட்டது.

**கூடுதல் எழுவினா ;-**

1. Whether the plaintiff entitle the relief of Mandatory Injunction as prayed for?

**6) இருதரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிய சான்றாவணங்கள் :-**

வாதிகள் தரப்பில் 1ம் வாதி சுமதி என்பவர் வா.சா.1 ஆகவும், ராஜாங்கம் என்பவர் வா.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டு, வா.சா.1ன் மூலம் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6

வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யவில்லை.

7) **வாதிகள் தரப்பு வாதுரையின் சுருக்கம் :-**

1ம் வாதியின் கணவரும் 2 முதல் 6 வாதிகளின் தகப்பனாருமாகிய தேவதாஸ் காணாமல் போய் 7 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டது என்பதை வாதிகள் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளதால் வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என கற்றறிந்த வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வாதம் செய்தார்.

8) **பிரதிவாதிகள் தரப்பு வாதுரையின் சுருக்கம் :-**

வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகளை நிரூபிக்க வாதிகள் கடமைப்பட்டுள்ளார் என்றும், வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் உண்மை தன்மைகளையும், நிரூபணம் செய்யும் விதமாக சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தவில்லை என்பதாலும், உரிய தரப்பினர்களை சேர்க்கவில்லை என்பதாலும், வாதிகள் தரப்பு வழக்கை தள்ளுபடி செய்யுமாறு பிரதிவாதிகளின் கற்றறிந்த வழக்கறிஞர் வாதிட்டார்.

9) **தீர்வு ;-**

**எழுவினாக்கள் -1, 2 மற்றும் கூடுதல் எழுவினா-1- க்கான தீர்வுகள்;-**

i) 1ம் வாதியின் கணவர் ராஜேந்திரன் உரிமையியல் சட்டப்படி இறந்தார் (Civil Death) என்றும், அவருக்கு 1 முதல் 6 வாதிகள் வாரிசுதாரர்கள் ஆவார்கள் என்று

வழக்குரையிலும், நிரூபண வாக்குமூலத்திலும் கூறியுள்ளனர். வாதிகள் தரப்பு வழக்கை நிரூபணம் செய்யும் விதமாக 1ம் வாதி சுமதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலமாக தேவதாஸ் அவர்களின் வாக்காளர் அடையாள அட்டை நகல் (அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது) வா.சா.ஆ.1 ஆகவும், கடந்த 07.03.2006 ம் தேதிய பாப்பாநாடு காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட மனு ரசீது வண்ண நகல் (அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது) வா.சா.ஆ.2 ஆகவும், 1ம் வாதி வடுவூர் காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகார் மனு நகல் வா.சா.ஆ.3 ஆகவும், கடந்த 23.12.2016 ம் தேதிய தேவதாஸ் காணாமல் போனது குறித்து செய்தி வெளிவந்த தினமலர் நாளிதழ் அசல் வா.சா.ஆ.4 ஆகவும், கடந்த 11.03.1994 ம் தேதிய தேவதாஸ் முதல் மனைவி பத்மாவதி இறப்பு சான்று நகல் (அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது) வா.சா.ஆ.5 ஆகவும், வாதிகளின் ஆதார் அட்டை (அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது) வா.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.1 ன் சாட்சியத்தை ஒத்துரைத்து ராஜாங்கம் என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

ii) 1ம் வாதியின் கணவரும், 2 முதல் 6 வாதிகளின் தகப்பனாருமாகிய தேவதாஸ் என்பவர் இறந்தார் (Civil Death) என்பதை நிரூபிக்க வேண்டிய பொறுப்பானது பிரிவு 101 இந்திய சாட்சிய சட்டத்தின்கீழ் வாதிகளை சார்ந்தது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், தேவதாஸ் என்பவரின் வாக்காளர் அடையாள அட்டை நகல் என்பது தெரிய வருகிறது. மேற்படி வா.சாஆ.1 ஆவணப்படி தேவதாஸ் என்பவரின் முகவரி மன்னார்குடி தாலுக்கா, முக்குளம் சாத்தனூர் என்பது தெரிய வருகிறது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணப்படி தேவதாஸ் உயிருடன் இருந்தார் என்பதை வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

iii) வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் கடந்த 07.03.2006ம் தேதியன்று பாப்பாநாடு காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகார் மனு ரசீது வண்ண நகல் என்பதும், மேற்படி புகார் மனுவில் தேவதாஸ் 02.03.2006ம் தேதி முதல் இருந்து காணவில்லை என்பது வா.சா.ஆ.2 ஆவணம் மூலம் தெரிய வருகிறது.

iv) வா.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலனை செய்கையில், 1ம் வாதியானவர் வடுவூர் காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகார் மனு நகல் என்பதும், மேற்படி தேவதாஸ் என்பவர் பல இடங்களில் தேடி பார்த்தும் எந்த தகவலும் கிடைக்கவில்லை என்பதால் கண்டுபிடித்து தர வேண்டி கொடுக்கப்பட்ட புகார் என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.4 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் தேவதாஸ் காணாமல் போனது குறித்து செய்தி 23.12.2016ம் தேதியிட்ட தினமலர் நாளிதழ் என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.5 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் கடந்த 11.03.1994ம் தேதியன்று தேவதாஸ் முதல் மனைவி பத்மாவதி இறப்பு சான்று என்பதும், மேற்படி இறப்பு சான்றில் காணாமல் போன தேவதாஸ் என்பவர் பத்மாவதியின் கணவர் என்பது தெரிய வருகிறது. வா.சா.ஆ.6 ஆவணத்தை பரிசீலனை செய்கையில் வாதிகளின் ஆதார் அட்டை என்பதும், மேற்படி ஆதார் அட்டையில் 1ம் வாதியின் கணவர் பெயர் தேவதாஸ் என்பதும், 2 முதல் 6 வாதிகளின் தகப்பனார் பெயர் தேவதாஸ் என்பது தெரிய வருகிறது.

v) ஆகவே, தேவதாஸ் என்பவர் உயிருடன் இருந்தார் என்பதற்கான ஆவணங்களாக வா.சா.ஆ.5 முதல் வா.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் மூலம் வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளனர். ஆகவே, தேவதாஸ் 02.03.2006 தேதிக்கு பின்னர் காணவில்லை என்பது தொடர்பாக 1ம் வாதி பாப்பநாடு காவல்நிலையம், வடுவூர் காவல்

நிலையம் மற்றும் தினசரி நாளிதழ் ஆகியவைகளில் விளம்பரம் கொடுத்து தேடியதன் அடிப்படையில் வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.4 ஆவணங்களின் அடிப்படையில் தேவதாஸ் காணாமல் போய் 7 ஆண்டுகளுக்கு மேல் ஆகின்றது என்பதை வாதிகள் தரப்பில் நிரூபிக்கப்பட்டுள்ளது.

**" பிரிவு 108 இந்திய சாட்சிய சட்டத்தின்படி உயிருடன் உள்ள நபர் 7 ஆண்டுகளுக்கு மேல் காணாமல் போனால் இறந்துபோனதாக சட்ட அனுமானம் செய்ய வேண்டும் என்பது குறித்து வரையறை செய்கிறது. மேற்படி யார் காணவில்லை என சொல்கிறாரோ மேற்படி சங்கதியை நிரூபிக்க வேண்டிய பொறுப்பானது அந்த நபரையே சார்ந்தது என வரையறை செய்கிறது".** ஆகவே, 1ம் வாதியானவர் அவரது கணவர் தேவதாஸ் வீட்டை விட்டு வெளியே சென்றவர் திரும்ப வரவில்லை என 07.03.2006 ம் தேதியன்று புகார் கொடுத்து வழக்கு தாக்கல் செய்த நாள் வரை கண்டுபிடிக்கமுடியவில்லை என வா.சா.ஆ.2 முதல் வா.சா.ஆ.4 ஆவணங்களின் மூலம் வாதிகள் தரப்பில் நிரூபித்துள்ளனர் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

vi) மேலும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.6 வரையிலான ஆவணங்களின் அடிப்படையில் தேவதாஸ் என்பவர் உயிருடன் இருந்தார் என்பதும், 1ம் வாதி மற்றும் பத்மாவதியை திருமணம் செய்து, 2 முதல் 4 வாதிகள் குழந்தைகளாக பிறந்தனர் என்றும், 1ம் வாதிக்கும், தேவதாசுக்கும், 5 மற்றும் 6 வாதிகள் குழந்தைகளாக பிறந்தனர் என்பதை வாதிகள் தரப்பில் சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் தெரிய வருகிறது.

vii) மேற்படி வா.சா.1 மற்றும் வா.சா.2 சாட்சிகளின் சாட்சியத்தை மறுத்து பிரதிவாதிகள் தரப்பில் எந்தவித சாட்சியமும், சான்றாவணமும் முன்னிறுத்தவில்லை. மேற்படி வாதிகள் தரப்பில் தேவதாஸ் என்பவர் சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு காணாமல் போய்விட்டார் என்றும், மேலும் வாதிகள் கோரியவாறு தேவதாஸ் என்பவர் உரிமையியல் சட்டப்படி இறந்துவிட்டார் (Civil Death) விளம்புகை மற்றும் அதற்கான சான்று வழங்க செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கதக்கது என எழுவினா-1, எழுவினா-2 மற்றும் கூடுதல் எழுவினா-1 க்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

**10) <u>எழுவினா-3- க்கு தீர்வு ;-</u>**

வாதிகள் கோரியுள்ள தேவதாஸ் என்பவர் உரிமையியல் சட்டப்படி இறந்தார் (Civil Death) என்று விளம்புகை மற்றும் அதற்காக சான்று பெற செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி எழுவினா- 1, எழுவினா-2 மற்றும் கூடுதல் எழுவினா-1 ல் தீர்வு கண்டுள்ள நிலையில், இதர பரிகாரங்கள் எதுவும் வாதிகளுக்கு வழங்க வேண்டியதில்லை என்று எழுவினா-3 க்கு இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. வழக்கின் தன்மையைக் கருத்திற்கொண்டு செலவுத் தொகை பற்றிய உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை.

**11) முடிவாக,**

1. தாவா அனுமதிக்கப்பட்டு கீழ்கண்டவாறு தீர்ப்பளிக்கப்படுகிறது.
2. 1ம் வாதியின் கணவரும் 2 முதல் 6 வாதிகளின் தகப்பனாருமாகிய தேவதாஸ் அவர்கள் சட்டப்படி இறந்தார் என விளம்புகை பரிகாரம் வழங்கியும், கடந்த 02.03.2006 ம் தேதியில் காணாமல் போன 1ம் வாதியின் கணவரும் 2 முதல் 6 வாதிகளின் தகப்பனாருமாகிய தேவதாஸ் அவர்களுக்கு இறப்பு சான்றிதழ் வழங்கிட 1ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும் தீர்ப்பளிக்கப்படுகிறது.
3. செலவுத்தொகை இல்லை.

இத்தீர்ப்புரையானது என்னால் சுருக்கெழுத்து-தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24-ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.03.24 17:56:08 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி.

**<u>வாதிகள் தரப்பு சாட்சிகள்</u> :-**

| | |
|---|---|
| வா.சா.1 | திருமதி.சுமதி (1ம் வாதி), க/பெ. தேவதாஸ். |
| வா.சா.2 | திரு.ராஜாங்கம் (3 ம் தரப்பினர்), த/பெ. தங்கப்பன். |

**<u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u> :-**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | -- | தேவதாஸ் அவர்களின் வாக்காளர் அடையாள அட்டை நகல் (அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது) |
| வா.சா.ஆ.2 | 07.03.2006 | பாப்பாநாடு காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட மனு ரசீது வண்ண நகல் (அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது) |
| வா.சா.ஆ.3 | -- | 1ம் வாதியால் வடுவூர் காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகார் மனு நகல். |
| வா.சா.ஆ.4 | 23.12.2016 | தேவதாஸ் காணாமல் போனது குறித்து செய்தி வெளிவந்த தினமலர் நாளிதழ் அசல். |
| வா.சா.ஆ.5 | 11.03.1994 | தேவதாஸ் முதல் மனைவி பத்மாவதி இறப்பு சான்று நகல் (அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது) |
| வா.சா.ஆ.6 | -- | வாதிகளின் ஆதார் அட்டை நகல் (அசலோடு ஒப்பீடு செய்யப்பட்டது) |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** :- இல்லை.

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
Date: 2026.03.24 17:56:19 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.